2024 ஜூன் 29]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 122, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜெ. கருணாநிதி, மாண்புமிகு நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் அவர்கள்.*

122—

மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி

***84563—திரு. ஜெ. கருணாநிதி:**

மாண்புமிகு நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தியாகராய நகர் தொகுதி, 141-வது வார்டு, முத்துரங்கன் சாலையில் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைக்க அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. கே.என். நேரு, நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தங்கள் அனுமதியுடன் திருத்திய விடையை பேரவைக்கு அளிக்கிறேன்.*

சென்னை பெருநகரில், தியாகராய நகர் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட வார்டு 141-லுள்ள 57 தெருக்களில் 74 ஆயிரம் மக்கள் வசிக்கின்றனர். முத்துரங்கன் சாலைக்கு தென் சென்னை நீரேற்று நிலையத்திலிருந்து தற்போது காலை 3-00 மணி முதல் காலை 6-00 மணி வரை குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது. இப்பகுதியில் குடிநீர் கட்டமைப்புகளை மேம்படுத்தி 24X7 முறையில் குடிநீர் நேரடியாக வீட்டு இணைப்புகளுக்கு வழங்க விரிவான திட்ட அறிக்கை ஒடிசா நீர் நிறுவனம் மூலமாகத் தயாரிக்கப்பட்டு வருகிறது. இந்தப் பணி முடியும்போது முத்துரங்கன் சாலை பகுதியில் 24 மணி நேரமும் குடிநீர் வழங்க வழிவகை செய்யப்படும். மேற்கண்ட வளர்ச்சிப் பணிகள் மேற்கொள்ளப்படும்போது, அனைத்துத் தெருக்களிலும் சம அளவு குடிநீர் வழங்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். எனவே, புதிய மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைக்க வேண்டிய அவசியமில்லையென்று அதிகாரிகள் சொல்லியிருக்கிறார்கள். எனினும், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தேவைப்படும் என்று சொன்னால், அதைப்பற்றி ஆலோசிக்கலாம்.

[2024 ஜூன் 29

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜெ. கருணாநிதி அவர்கள்.

திரு. ஜெ. கருணாநிதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தியாகராயர் நகர் தொகுதி, 141-வது வார்டு, கண்ணம்மாபேட்டை பகுதியில் நீண்டகாலமாக குடிநீர் பிரச்சினை இருந்துகொண்டிருக்கிறது. இப்போது லாரிகள் மூலமாகத்தான் குடிநீர் விநியோகம் செய்யப்பட்டுக்கொண்டிருக்கிறது. முத்துரங்கன் சாலை பகுதியில் குடிநீர் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைக்க வேண்டுமென்பது, அந்தப் பகுதி மக்களின் நீண்டகால கோரிக்கையாக இருக்கிறது. ஏனென்றால், இது கடைசி point. வள்ளுவர் கோட்டத்திலிருந்து வருகிற தண்ணீரின் கடைசி point ஆக இருப்பதால், தண்ணீர் அந்தப் பகுதியில் சரியாக வரவில்லை. எனவே, மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைக்க முடியுமா என்று மாண்புமிகு அமைச்சர் அவர்களிடத்தில் தங்கள் வாயிலாகக் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. கே.என். நேரு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, துறையினுடைய அதிகாரிகள் ஒடிசா நீர் நிறுவனத்தோடு ஆலோசித்து, 24 மணி நேரமும் தண்ணீர் கொடுப்பதற்கான விரிவான திட்ட அறிக்கையைத் தயார் செய்துகொண்டிருக்கிறார்கள். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், நீண்டகாலமாக இந்தப் பிரச்சினை இருக்கிறது என்று சொல்கிறார்கள். எனவே, மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அவசியம் தேவைப்படும்பட்சத்தில் உடனடியாக மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அங்கு கட்டித் தரப்படும். அது ஒன்றும் பெரிய விஷயமல்ல; உடனே அதிகாரிகளுக்கு உத்தரவிட்டு, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய அனுமதியைப் பெற்று மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி கட்டப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜெ. கருணாநிதி அவர்கள்.

திரு. ஜெ. கருணாநிதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தியாகராய நகர் தொகுதி முழுவதும் குடிநீரில்

2024 ஜூன் 29]

கழிவுநீர் கலக்கும் பிரச்சினை உள்ளது. குறிப்பாகச் சொல்ல வேண்டுமென்றால், pumping station*-ஐ சரியாக இயக்க முடியாத நிலை உள்ளது. அந்த* chamber*-களெல்லாம் கட்டப்பட்டு 50 ஆண்டுக் காலம் ஆகின்றன. இப்போது மக்கள் தொகை அதிகமாக உள்ளது. 50 ஆண்டுக் காலம் ஆகிவிட்டதால், அந்த* chamber*-களெல்லாம் பழுதடைந்துவிட்டன.* Chamber*-ல் இப்போது செங்கற்கள் எதுவுமே இல்லை. தியாகராய நகர் தொகுதியில், நிறைய இடங்களில் குறிப்பாக, 7 வார்டுகளில் குடிநீரில் கழிவுநீர் கலந்துவரும் பிரச்சினைகள் அதிகமாக இருக்கின்றன. எனவே, கழிவுநீர் பாதையை மாற்றி, புதிய* Chamber*-கள் அமைத்து, சீரமைக்க வேண்டுமென மாண்புமிகு அமைச்சர் அவர்களைத் தங்கள் வாயிலாகக் கேட்டுக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. கே.என். நேரு: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் இந்த ஆண்டு வட சென்னை வளர்ச்சித் திட்டத்தின்கீழ் (*Chennai Metropolitan Water Supply and Sewerage Board*) சென்னை பெருநகர குடிநீர் வழங்கல் வாரியத்திற்குக் கிட்டத்தட்ட 900 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு பணிகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. தியாகராய நகர் பகுதியிலே குடிநீரில் கழிவுநீர் கலப்பதாக மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்கிறார்கள். இன்றோ, நாளையோ, மேலாண்மை இயக்குநர் அவர்களும், அதிகாரிகளும் அங்கு சென்று ஆய்வு செய்து எந்த இடத்தில் கழிவுநீர் கலக்கின்றதோ அதை உடனடியாகச் சரி செய்யவும், மிகவும் பழுதடைந்த குழாய்களாக இருந்தால் அவற்றை மாற்றவும், குடிநீரை நல்ல முறையில் கொடுப்பதற்குரிய அனைத்து முயற்சிகளும் உடனே செய்யப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

முற்பகல் 9-40

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர்கள் எல்லோருமே துணைக் கேள்வி கேட்கிறீர்கள். மாண்புமிகு அமைச்சர்களுக்கும், உறுப்பினர்களுக்கும் ஒரு தகவலைச் சொல்கிறேன். மாண்புமிகு மறைந்த தலைவர் கலைஞர் அவர்கள் 6 துணை கேள்விகளுக்கும் சேர்த்து, 2 நிமிடங்களில் கேள்வியும்*

கேட்கப்பட்டு, பதிலும் சொல்லியிருக்கிறார்கள். 10 கேள்விகளை 20 நிமிடங்களில் முடித்துவிட்டு போய்விடலாம் அல்லது 30 நிமிடங்களில் முடித்துவிடலாம். ஒரு மணி நேரம் ஆகிறது. பேசுவதற்கு ஒரு வாய்ப்பு கொடுத்துவிட்டால் திரும்ப mike வாங்குவதற்கு அவ்வளவு கஷ்டமாக இருக்கிறது. அதிகபட்சம் 10 second-ல் ஒரு கேள்வி இருக்க வேண்டும். 30 second-ல் பதில் இருந்தால்தான் துணைக் கேள்விக்கு கூட இரண்டு பேருக்கு வாய்ப்பு கொடுக்க முடியும். அந்த அடிப்படையில் போனால், ஒருவர் அல்லது இருவருக்கு வாய்ப்புக் கொடுப்பேன். இல்லையென்றால், உடனே cut பண்ணிவிடுவேன். மாண்புமிகு உறுப்பினர் திரு. S. சதாசிவம் அவர்கள். (குறுக்கீடு) நீங்கள் யாரும் வாய்ப்புக் கேட்கவில்லையே!

திரு. S. சதாசிவம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மேட்டூர் தொகுதி, வீரக்கல்புதூர் பேரூராட்சியில், 7-வது வார்டில் ஆயிரம் பேர் குடியிருக்கிறார்கள். அருகிலுள்ள வார்டில் இருந்துதான் தண்ணீர் வருகிறது. சேலம் மாவட்ட பொறுப்பு அமைச்சர், மூத்த அமைச்சர் அவர்கள், 7-வது வார்டில் 30 ஆயிரம் லிட்டர் கொள்ளளவுக் கொண்ட நீர்த்தேக்கத் தொட்டியும், P.N. பட்டி பஞ்சாயத்து, தாழையூர் 8-வது வார்டில் 30 ஆயிரம் லிட்டர் கொள்ளளவுக் கொண்ட நீர்த்தேக்கத் தொட்டியும் அங்கு குடியிருக்கிற மக்களுக்குக் கட்டித் தருவார்களா என்று தங்கள் வாயிலாகக் கேட்டு அமர்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. கே.என். நேரு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே இரண்டு நாட்களுக்கு முன்பு இந்தக் கேள்வி கேட்கப்பட்டது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அப்பொழுது சபையில் இல்லை என்று நான் கருதுகிறேன். P.N. பட்டி பேரூராட்சிக்குக் குழாய் அமைக்கின்ற இடம் பொதுப் பணித் துறையினுடைய இடமாக இருக்கிறது. அவர்களிடம் அனுமதி கேட்டு, குழாய் பதித்து உடனடியாகத் தண்ணீர் வழங்கப்படும் என்று இரண்டு நாட்களுக்கு முன்பாகச் சொல்லியிருக்கிறேன். எனவே, அனுமதியைப் பெற்று நிச்சயமாக, அது உடனடியாகச் செய்து தரப்படும்.